அலகு - 3

# நாற்று நட வாரீர்!



"நாளை ஏர் உழப் போகணும்.
என்னை அதிகாலையில்
எழுப்பிவிடுவாயா?" செவலைக்
காளை கேட்டது.

"இரவெல்லாம் காவல்
காப்பேன். அதிகாலையில்தான்
தூங்குவேன். நான் எப்படி
உன்னை எழுப்பிவிட
முடியும்?" நாய் எதிர்க்
கேள்வி கேட்டது.

"வாத்தக்கா..
நீயாவது
எழுப்பிவிடுவாயா?"

" நாங்கள் ஐவர்.
தினமும் முட்டை
இட்டுக் களைத்திருப்
போம். நாங்கள்
எப்படி எழுப்ப
முடியும்?"
வாத்துகளும் மறுத்தன.

"பசுவே...
நீயாவது..?"

'மாட்டேன்' என்று பசுவும் தலையாட்டியது.

"கூவும் சேவலே... நீயாவது...?"


"நீ என்ன பெரிய ஆளா? உனக்காக நான் கூவமாட்டேன்." சேவலும் மறுத்தது.

"காட்டில் நான் வேலை செய்யாவிட்டால்.... நீங்கள் பட்டினிதான்!" காளை கோபமாகக் கத்தியது.

"சும்மா கத்தாதே! நாங்கள் வீட்டின் செல்லப்பிள்ளைகள். நீயோ வேலைக்காரன்தான்," நாய் குரைத்தது. செவலைக் காளை வாயை மூடிக் கொண்டது. ஆனால் கண்களை மூடவில்லை. விடிவதற்காகக் காத்திருந்தது.

பொழுது புலரும் நேரம்... "புஸ்.. புஸ்...," என்ற சத்தம். கோழிக் கூட்டிற்கு அருகில் கேட்டது. ஒரு பாம்பு ஊர்ந்து சென்றது. "பா... பா...கொக்..ரக்... கோ..." சேவல் கொக்கரித்தது. செவலைக் காளை பார்த்தது. கயிற்றை அறுத்தது. பாம்பு பயந்து ஓடியது.

அன்றிலிருந்து சேவல் நாள் தவறாமல் அதிகாலையில் கூவத் தொடங்கியது.



## சொல்லுங்கள்

நாம் வீடுகளில் பிராணிகளை எதற்காக வளர்க்கிறோம்?



| விரும்பி வளர்ப்பவை | வேலை செய்ய வளர்ப்பவை |
|---|---|
| • பூனை | • காளை |
| • | • |
| • | • |
| • | • |



சங்கீதாவின் வீட்டில் ஒரு பசு உண்டு. அவர்கள் தினமும் பாலை ஒரு கூட்டுறவு சங்கத்தில் கொடுப்பது வழக்கம். இரண்டு வாரத்திற்கு ஒரு முறை மட்டுமே மொத்தமாகப் பணம் கிடைக்கும்.

கூடுதல் பால் கொடுத்தது யார்?

| பெயர் | முதல்வாரம் (லிட்டரில்) | இரண்டாவது வாரம் (லிட்டரில்) | மொத்தம் |
|---|---|---|---|
| சங்கீதா | 22 | 18 | |
| அலமேலு | 33 | 45 | |
| மாறன் | 30 | 34 | |
| அகமது | 19 | 29 | |
| மேரி | 31 | 48 | |

கூடுதல் கொடுத்தது யார்?


[ ]

குறைவாகக் கொடுத்தது யார்?

[ ]


எவ்வளவு வித்தியாசம்?

[ ]



# வேளாண் பண்ணையில்...

**“வேளாண் பெருமக்களுக்கு ஓர் நற்செய்தி!**
**இனிக்கும் கரும்பு வேண்டுமா?**
**உண்ணும் நெல் வேண்டுமா?**
**படரும் பாகல் வேண்டுமா?**
**கவலை வேண்டாம். நம்ம ஊரு சங்கத்திற்கு வாருங்கள்.தேவையான நடவுப் பொருளை வாங்குங்கள்!”**



ஒலிபெருக்கியின் சத்தம் கேட்டு சங்கீதாவும், அப்பாவும் வீட்டிற்கு வெளியே வந்துபார்த்தனர். அறிவிப்பைக் கேட்டு சங்கீதாவின் அப்பா மகிழ்ந்தார்.


சங்கீதாவின் அப்பா மறுநாள் மாட்டு வண்டியைப் பூட்டிக் கொண்டு வேளாண்சங்கத்திற்குச் சென்றார். சங்கீதாவும் உடன் சென்றாள்.

விதைகள், கிழங்குகள், நாற்றுகள் தண்டுகள் எனப் பிரித்து வரிசைப் படுத்தி வைத்திருந்தனர். சங்கீதாவின் அப்பா கிழங்குகளை எடுத்தார். “அப்பா!, இதென்ன? மரச்சீனிக் கிழங்கு விதையா...?” சங்கீதா கேட்டாள். அதைக் கேட்ட அப்பா சிரித்தார்.

## சொல்லுங்கள்

- “அது மரச்சீனிக் கிழங்கு விதையா” என்று சங்கீதா கேட்டதும் அப்பா சிரித்தது ஏன்?
- உங்கள் ஊரில் கூடுதலாக நடுவது எது?

| தாவரத்தின் பெயர் | நடவுப் பொருள் |
|---|---|
| • கத்திரிச்செடி | • விதை |



# நாற்று நட வருகிறேன்...

"வரப்பில் கவனமாக நடக்க வேண்டும்", அப்பா எச்சரித்தார்.

உழுத வயல் கண்ணாடி போல் பளபளத்தது. சேற்று வயலில் இறங்கி ஆட ஆசை வந்தது.

"இங்கேயே இரும்மா. மரச்சீனித் தண்டு ஊன்றுபவர்களைப் பார்த்துவிட்டு வருகிறேன்"




அப்பா போனதும் சங்கீதா வரப்பில் அமர்ந்தாள். நாற்று நடும் அழகை ரசிக்கத் தொடங்கினாள். 'ஒரு கையில் நாற்றுக் கற்றை. இன்னொரு கையால் ஒவ்வொன்றாக எடுத்து எவ்வளவு விரைவாக நடுகிறார்கள்! அம்மா கோலம் போடும் போது இப்படித்தானே புள்ளி வைப்பார்கள்!' சங்கீதாவிற்கு ஆச்சரியமாக இருந்தது.

"எப்படிப் பார்த்தாலும் வரிசையாக இருக்கிறதே! இவர்கள் கையில் அளவுகோல் இருக்குமோ!" சந்தேகம் வந்தது.

" நானும் நாற்று நட வருகிறேன்" சொல்லிக் கொண்டே வயலில் இறங்கினாள்.


## வாழைத் தோட்டத்தில்

- சங்கீதா பார்த்த போது... வாழைக் கன்றுகளை இப்படி நட்டிருந்தார்கள். மீதிக் கன்றுகளை எப்படி நடுவார்கள்?



2 + 2 = 4
2 + 2 + 2 = 6
2 + 2 + 2 + 2 = 8
...................... = ....
...................... = ....
...................... = ....

- அவரை விதை 5 வீதம் ஒரு வரியில் நட்டால் மொத்தம் 5




**5 ÅRm CWi Ó Y¬«p ShPôp ùUôjRm 10.**

**5 ÅRm êuß Y¬«p ShPôp ùUôjRm 15.**

**® û RLû [ 10 ÅRm JÚY¬«p ShPôp 10 Y¬«p ùUôjRm GjRû ] ?**

| | | |
|---|---|---|
| 1 | 10 | 10 |
| 2 | 10 + 10 | 20 |
| 3 | 10 + 10 + 10 | 30 |
| 4 | | |
| 5 | | |
| 6 | | |
| 7 | | |
| 8 | | |
| 9 | | |
| 10 | | |

## நான் வளர என்ன தேவை...




- சங்கீதா கேட்டதற்கு அம்மா என்ன பதில் கூறியிருப்பாள்?
- தாவரங்களுக்குத் தண்ணீர் கிடைக்காமல் இருந்தால் என்ன ஆகும்?

## எங்க வீட்டுத் தோட்டத்திலே

ஒரு கொடியைத் தூக்கிப் பார்த்தால்
ஒரு நூறு பாவக்காய்
இரண்டு கொடியைத் தூக்கிப் பார்த்தால்
இரு நூறு பாவக்காய்
.......................................................................................
.......................................................................................
.......................................................................................
.......................................................................................
.......................................................................................
.......................................................................................
பத்து கொடியைத் தூக்கிப்பார்த்தால்
ஓர் ஆயிரம் பாவக்காய்
எத்தனை எத்தனை பாவக்காய்
எங்க வீட்டுத் தோட்டத்திலே.

# பூசணிக் கொடி சிரித்தது

பூசணி தன் கதையைச் சொல்லத் தொடங்கியது. “என் கதை சுவையானது. ஒரு பூசணிக்காயில் விதையாக இருந்தேன். காயை வெட்டி விதையை வெளியே எடுத்தனர். சாம்பல் தடவி உலர வைத்தனர். தோட்டத்து மண்ணைப் பக்குவம் செய்தனர். அதில் என்னை நட்டனர். எனக்கு மூச்சு முட்டியது. மண்ணுக்குள் தண்ணீருக்காகத் தவம் இருந்தேன்! அப்போது மழை பெய்தது. நான் முளைவிடத் தொடங்கினேன்! முதலில் வேர்தான் வெளியே வந்தது. நான் மெல்ல எழுந்து நின்றேன். வானத்தை அண்ணாந்து பார்த்தேன். காற்றை இழுத்து மூச்சுவிட்டேன். ஆஹா! என்ன சுகம்! நாட்கள் மெல்ல நகர்ந்தன. குருத்து அரும்பாக மாறியது. அரும்பு செடியாக மாறியது. நான் நாலாபக்கமும் கொடிவீசிப் படர்ந்தேன். மஞ்சள் வண்ண

மலர்கள் என் கொடியில் மலர்ந்தன. அவற்றில் சில காயாக மாறின. அதில் ஒன்றைத்தான் நீ பார்க்கிறாய். 'காளை கிடக்கும் கயிறு ஓடும்' என்பது என்னைப் பற்றிய விடுகதை. சுரை, பாகல், புடலை ஆகியோர் என் சகோதரிகள். நாங்கள் கொடி இனத்தைச் சேர்ந்தவர்கள்".

"ஓ... அப்படியா!" என்றபடியே சங்கீதா விடைபெற்றாள்.

## தெரிந்துகொள்வோம்

- *'காளை கிடக்கும் கயிறு ஓடும் – அது என்ன?'*
- *பச்சைப் பெட்டிக்குள் வெள்ளை முத்துக்கள். – அது என்ன?*
- *முதலில் புளிப்பேன் பின்னர் இனிப்பேன் – நான் யார்?*
- *ஒற்றைக்கால் கோழிக்கு வயிறு நிறைய முட்டை – அது என்ன?'*

